# 17 "நான்" இல்லை "நாம்"



வயலூர் என்பது ஓர் அழகிய கிராமம். இந்தக் கிராமத்தில் நாவலர் வித்தியாலயம் என்ற பெயரில் ஒரு பாடசாலை இயங்கி வந்தது. இந்தப் பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கோ நீண்டநாட்களாக ஓர் ஆசை. அந்தப் பாடசாலையில் தேவையில்லாமல், ஆங்காங்கு முளைத்துக் கிடக்கும் சின்னஞ்சிறு செடிகளை அகற்ற வேண்டும், அந்தப் பாடசாலை முழுவதும் உள்ள கொட்டிக் கிடக்கும் குப்பைகளை முழுவதுமாக சுத்தப்படுத்த வேண்டும், இது மட்டுமல்ல... ஆங்காங்கு துார்ந்துபோன கொட்டகைகளின் மேற்புறங்களையும் முடிந்த வரையில் சீர்செய்ய வேண்டும் என்பதாகும்.



இப்படியே யோசித்துக் கொண்டிருந்த போதுதான், அந்தப் பாடசாலையில் பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் வாணன், தாசன் என்ற இரண்டு மாணவர்கள் தலைமை ஆசிரியரைப் பார்ப்பதற்காக, பரபரப்புடன், வந்து கொண்டிருந்தார்கள்.

தன்னை நோக்கிவந்த இரண்டு மாணவர்களையும் ஒரு கணம் உற்றுப் பார்த்தார். "என்ன காரணம்? உங்களுக்குள், வழக்கம் போலவே ஏதாவது பிரச்சனையா?" என்பதைப் போல் ஒரு பார்வையைப் பார்த்தார்.



தலைமை ஆசிரியரைப் பார்த்து வாணன், தாசனைப் பற்றி புகார் தெரிவிக்கத் தொடங்கினான்.

"ஐயா... இந்தப் பாடசாலையில் மாணவத் தலைவராக இருக்கக்கூடிய தகுதி தனக்கு மட்டுமே இருப்பதாகத் தாசன் கூறுகின்றான். ஐயா, நீங்களே




இலவச விநியோகத்திற்காக

கூறுங்கள், ஏன் எனக்கு அந்தத் தகுதி இல்லையா?" இப்படி வாணன் தலைமையாசிரியரைப் பார்த்துக் கேட்டான்.

"ஐயா... மாணவ தலைவர் பதவி என்பது சாதாரண விஷயமல்ல. இதற்கு அதிக அளவில் திறமைகள் வேண்டும். இந்த தகுதிகளில் ஒரு சிறு துளியாவது வாணனிடம் இருக்கின்றதா? நீங்களே கூறுங்கள்"

இது தாசனின் வாதம்.



தலைமை ஆசிரியர் நீண்ட நேரம் யோசித்தார். பாடசாலையை எப்படி சுத்தப்படுத்தலாம்? என்று யோசித்துக் கொண்டிருந்த தலைமை ஆசிரியருக்கோ - இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

"தாசா, வாணா... எனதருமை மாணவர்களே...!

இப்படி என்முன்னே வாருங்கள் இருவரும்.

உங்களில் யாருக்கு மாணவர்களை வழி நடத்திச் செல்வதற்கான "தலைவருக்கான தகுதி" இருக்கின்றது என்பது தானே பிரச்சினை?

இதற்கு நானொரு தீர்வினைச் சொல்லட்டுமா?

உங்களில் யாரொருவர் முந்திக் கொண்டு இந்தப் பாடசாலையில் உள்ள குப்பைகளை, தூர்ந்து போன கொட்டகைகளின் கூரைகளை, ஆங்காங்கு உள்ள தேவையற்ற செடிகளை நீக்கி, இடத்தைத் துப்புரவு செய்கின்றாரோ, அவரையே நான் இந்தப் பாடசாலைக்கான "மாணவர்த் தலைவன் என்பேன்", என்று கூறி முடித்தார். தலைமை ஆசிரியர் சொல்லி முடித்ததுதான் தாமதம்,

"சரி" என்பதைப்போன்று இருவரும் போட்டியை ஏற்றுக் கொண்டு, உடனே காரியத்தில் இறங்குவதற்குத் தயாரானார்கள்.

தலைமை ஆசிரியரும் இனி நடக்கப் போகின்ற விஷயங்களைப் பார்ப்பதற்கு மிக ஆவலாய் இருந்தார்.

தாசனோ.... தலைமை ஆசிரியரின் அறையை விட்டு, நேராக தன் நண்பர்களிடம் வந்தான்.

நண்பர்களே! இந்தப் பாடசாலை நான் படிக்கும் பாடசாலை.

நான் இந்தப் பாடசாலையைச் சுத்தம் செய்வதாக முடிவெடுத்துள்ளேன். இங்கே இருக்கின்ற தேவையற்ற செடிகளையும் இதோ என் கைகளால் பிடுங்கி எறியப்போகின்றேன்.



இலவச விநியோகத்திற்காக

இந்த நல்ல காரியத்தைச் செய்வதன் வாயிலாக என் புகழ் இந்தப் பாடசாலை முழுவதுமே பேசப்படுமல்லவா? “இதோ நான் புறப்பட்டுவிட்டேன். நீங்கள் அனைவரும், அணிவகுத்து என்பின்னால் வாருங்கள்.”

இப்படி தாசன் பேசப் பேச... பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த மாணவர் கூட்டம் சிறிது சிறிதாகக் கலையத் தொடங்கியது. ஒரு கட்டத்தில் தாசனின் பேச்சைக் கேட்பதற்கு மாணவர்களே இல்லை. தாசனின் மிக நெருக்கமான நண்பர்கள் கூட இடத்தைக் காலி செய்து விட்டனர்.

நடந்த நிகழ்ச்சிகளைத் தலைமை ஆசிரியரே தொலைவில் இருந்தவாறு பார்த்துக் கொண்டே இருந்தார். அப்போதே, தாசன் செய்த தவறையும் புரிந்து கொண்டார். தாசன் பேசி முடித்து சிறிதுநேரம்கூட ஆகியிருக்காது.

இங்கே கலைந்து போன கூட்டம், அருகில் உள்ள மரத்தடியில்கூடத் தொடங்கியது. காரணம் அங்கே வாணன், அன்போடு சக மாணவர்களிடம் உரையாற்றிக் கொண்டிருந்தான்.

“என் இனிய சக நண்பர்களே!”

இது நாம் அனைவரும் இணைந்து படிக்கின்ற பாடசாலை அல்லவா? நாம் படிக்கின்ற இந்தப் பாடசாலை, இத்தனை அசிங்கமாக இருக்கலாமா?

நாம் அனைவரும் ஒன்றிணைந்து, நம் பாடசாலையைச் சுத்தம் செய்யலாமா?

இந்த நல்ல காரியத்தைச் செய்தால் நம் அனைவரின் புகழும் இந்தப் பாடசாலை முழுவதும் பேசப்படும் அல்லவா?” இப்படி வாணன் பேசப் பேச, “புறப்படலாம்... புறப்படலாம்...” என்று மாணவர்கள் மத்தியிலிருந்து குரல்கள் தொடர்ந்து வந்துக் கொண்டிருந்தன.


சரியாக இரண்டு மணித்தியாலங்கள் ஆகியிருக்கும். பாடசாலையே “பளிச்” சென்று இருந்தது. தேவையற்ற செடிகள் இப்போது அங்கே இல்லை. தூர்ந்து போன கீற்றுக் கொட்டகைகள் எல்லாம் ஓரளவிற்குச் சீர் செய்யப்பட்டிருந்தன. குப்பைகள் எல்லாமே பாடசாலைக்கு பிரியாவிடை சொல்லி இருந்தன.

மாணவர்களைப் பக்குவமாக வேலை வாங்கி, பாடசாலையைச் சுத்தப்படுத்திய வாணனை தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் உட்பட அனைவரும் பாராட்டிக் கொண்டிருந்தனர்.

இந்தப் பாடசாலையில் உள்ள மாணவர்களை வழி நடத்தக்கூடிய ஆற்றலும், ஒரு தலைவருக்குரிய தகுதியும் மாணவன் வாணனுக்கு இருப்பதாகத் தலைமை ஆசிரியர் வெளிப்படையாகவே அறிவித்தார்.

பாராட்டெல்லாம் முடிந்து, கூட்டம் கலையத் தொடங்கியது. பாவம், பாடசாலைக்கு அருகிலுள்ள கோவிலில் தன்னந்தனியாக அமர்ந்திருந்த

மாணவன் தாசனைத் தலைமை ஆசிரியர் அன்போடு அழைத்தார். பரிவோடுத் தட்டிக் கொடுத்தார்.



"தாசா... நீ பேசிய அதே கருத்தைத்தான் வாணனும் மாணவர்களிடையே பேசினான். ஆனால் அவனால் மட்டும் மாணவர்களை ஒன்று திரட்ட முடிந்தது. அவர்களை வைத்து வேலை வாங்க முடிந்ததே.. இதற்கான காரணம் உனக்குப் புரிந்ததா?" இப்படி தலைமையாசிரியர் கேட்டதுதான்.

"புரியவில்லை" என்பதைப் போல் - தாசன் இப்படியும், அப்படியுமாக தலையாட்டினான்.

"நான் சொல்லட்டுமா?...

நீ பேசிய போது.. ஒவ்வொரு தடவையும் நான், நான் என்று பேசினாய். நான் ... நான்... என்று நீ பேசியபோது அதில் ஆணவம் இருப்பதாக, உன் சக தோழர்கள் நினைத்துவிட்டார்கள். அது மட்டும் அல்ல. உனக்கும், அவர்களுக்கும் இருந்த உறவானது, நீ பயன்படுத்திய வார்த்தையால் மிக நீண்ட இடைவெளியை ஏற்படுத்திவிட்டது.

அதனால்... முடிந்த வரையில்...

நாம்... நாம் என்ற வார்த்தையைப் பயன்படுத்து.

இது அன்பை வெளிப்படுத்தும். ஆணவம் இல்லாதவனாக, பிறரை அரவணைத்துச் செல்லும் தகுதியுள்ளவனாக, சமுதாயத்தில் உன்னை அடையாளங்காட்டும். பிறர் மேல் உள்ள மரியாதையை, அன்பை, நம்பிக்கையை "நாம்" என்ற வார்த்தையானது உறுதிப்படுத்தும். இனியாவது, முடிந்தவரையில் நாம் என்பதையே பயன்படுத்து... தலைமைப் பதவி தானாகவே உன்னை வந்து சேரும்."

இப்படி தலைமை ஆசிரியர் சொல்லி முடித்தார்.

முதன்முதலாக தாசன், தான் செய்த தவறை உணரத் தொடங்கினான்.

அரிமதி இளம்பரிதி

நன்றி: மனிதவள மேம்பாட்டுக் கதைகள்



இலவச விநியோகத்திற்காக

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| **தூர்ந்து** | - | அழிந்து |
| **ஆங்காங்கே** | - | பல்வேறு இடங்களில் |
| **அணிவகுத்து** | - | வரிசையாக |
| **இணைந்து** | - | ஒன்றாக |
| **அரவணைத்து** | - | ஒன்றாக இணைத்து |

## கிரகித்தற் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

அ. பாடசாலைத் தலைமை ஆசிரியரின் நீண்டநாள் ஆசை என்ன?

ஆ. வாணனும், தாசனும் தலைமை ஆசிரியரைப் பார்ப்பதற்கு எதற்காக வந்தார்கள்?

இ. தலைவருக்கான தகுதியைப் பரீட்சிக்க தலைமை ஆசிரியர் கொடுத்த செயற்றிட்டம் யாது?

ஈ. தாசனின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த மாணவ கூட்டம் ஏன் கலையத் தொடங்கியது?

உ. வாணனுடன் இணைந்து செயற்பட மாணவர்கள் முன்வந்தமைக்கான காரணம் யாது?

ஊ. வாணன் எதற்காக ஆசிரியர்களின் பாராட்டைப் பெற்றான்?

எ. தாசன் தன் பேச்சில் அடிக்கடி பயன்படுத்திய சொல் எது? அதற்குப் பதிலாக எச் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்?

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

1. மாணவ தலைவனுக்குரிய பண்புகள் பற்றி மற்றவர்களிடம் கேட்டு அறிக.
2. கதையை மற்றவர்கள் கேட்டு இரசிக்கக் கூடிய முறையில் உரிய ஏற்ற இறக்கங்களுடன் வாசிக்க.
3. கதையில் பாத்திரங்களின் குண இயல்புகளை வர்ணிக்குக. (குழுவாக)
4. மாணவர்களைக் குழுக்களாக்கி, ஒவ்வொரு குழுவும் தமக்குப் பிடித்த கதாபாத்திரங்கள் பற்றி விபரிக்குக. பாத்திரமேற்று நடிக்க முன்வருக.



இலவச விநியோகத்திற்காக

5. கதையின் சுருக்கத்தை உமது மொழிநடையில் எழுதுக.

6. "நான்" என்ற சொல்லை முதன்மைப்படுத்துவதால் ஏற்படும் பிரச்சினைகளைப் பற்றி சக மாணவர்களுடன் கலந்துரையாடுக.

## அகராதி

### அ - ஆ

| | | |
|---|---|---|
| அகம் மகிழ | - | மனம் சந்தோஷிக்க |
| அகற்றினார் | - | நீக்கினார் |
| அகற்று | - | நீக்கு |
| அணுகி | - | நெருங்கி |
| அணுத்திரள் | - | நுண்ணிய பொருள்களின் கூட்டம் |
| அண்ணலார் | - | பெருமையில் சிறந்தவர் |
| அண்மை | - | சமீபம் |
| அந்தமில் இன்பம் | - | முடிவில்லாசுகம் |
| அமரச் செய்து | - | உட்காரச்செய்து |
| அமைச்சர் | - | மந்திரி |
| அரம்பையர் | - | தெய்வப் பெண்கள் |
| அரியணை | - | சிம்மாசனம் |
| அருள் | - | கருணை |
| அழுக்காறுற்று | - | பொறாமை கொண்டு |
| அளவளாவி | - | சம்பாஷித்து |
| அற்றே | - | அத்தன்மையதே |
| ஆக்கம் | - | உண்டுபண்ணுதல் |
| ஆய்வுகூடம் | - | ஆராய்ச்சிச்சாலை |
| ஆய்ந்தாரில்லை | - | யோசித்தாரில்லை |
| ஆரோக்கியம் | - | தேகசுகம் |



### மேலதிகச் செயற்பாடு

"என் வகுப்பாசிரியர்" என்ற தலைப்பில் மேடைப் பேச்சு ஒன்றைத் தயாரிக்குக.



இலவச விநியோகத்திற்காக